**செய்தி வெளியீடு எண்:611** **நாள்: 26.09.2007**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணி நியமன ஆணை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், குடிநீர் திட்டங்களையும் பாதாள சாக்கடை திட்டங்களையும் விரைவாக செயல்படுத்திட, காலியாக உள்ள பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று **12.04.2007** அன்று தமிழ் நாடு சட்டமன்ற பேரவையில் நடைபெற்ற நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை தொடர்ந்து, அலுவலக பணிகளையும் களப்பணிகளையும் விரைவுபடுத்திட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, காலி பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி தகுதி வாய்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்று, கீழ்நிலை பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் **17** நபர்களுக்கு ஓட்டுநர் பணி நியமனமும், உரிய தகுதி உள்ள இளங்களை பட்டம் பெற்று கீழ்நிலை பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் **36** நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனமும், உதவியாளராக பதவி உயர்வு பெற உரிய தகுதிகள் பெற்ற இளநிலை உதவியாளர் / தட்டச்சர் 95 நபர்களுக்கும் / 3–ம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 23 நபர்களுக்கு உதவியாளராக பணி மாற்றல் முறை ஆணைகளும் **26.09.2007** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் முந்தைய ஆட்சியில் பல ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருந்த பணி நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் சலுகைகளை கழக அரசு பதவியேற்ற பின்பு மீண்டும் வழங்கிட ஆணையிட்டதின் பயனாக இந்த பணியாணைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிர்வாகத் துறை செயலாளர் திரு கே. தீனபந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு ஸ்வரண்சிங், வாரிய பொறியியல் இயக்குநர் திரு பி.கே. நடேசன், மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், குறுகிய காலத்தில் பணியாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் 858 தொகுப்பு ஊதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். 173 மதிப்பூதிய பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி முதலிய வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டது.

20 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. 10 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தேசீய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது. சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004 - 05 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை 28.8.2006 லும், 2005 – 06ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டது. ஐந்து ஆண்டு காலமாக பதவி உயர்வுகள் வழங்கப்படாதிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

புதிதாக 19 உதவிப் பொறியாளர்கள் நியமனம் மற்றும் கீழ்நிலை பதவிகளில் பணியாற்றி பொறியியல் பட்டம் பெற்ற 67 நபர்களுக்கு உதவிப் பொறியாளராக பணி நியமன ஆணை 23.07.2007 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற ஆணைகள் வழங்கியதற்கிணங்க, மாபெரும் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை துரிதமாக செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது.

இதைப்போல ஊரகக் குடிநீர் திட்ட வேலைகள் துரிதமாக செயல்படுத்திட திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சீபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டது. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியார்களுக்கும் பதவி உயர்வு பெற்றிட வழி வகை செய்தது.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.